**அகுரன பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 20 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் அகுரன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை கட்டிட அபிவிருத்திக்காக 3 சந்தர்ப்பங்களில் செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,453,382 ஆன பெறுமதி மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 உருப்படிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கிறேன். |
| (ii) | சபைக்கு சொந்தமான எகொட கும்புர காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் முறையாக சுவீகரித்துக் கொண்டு கண்கீடு செய்வதாக அறிவிக்கிறேன். |
| (iii) | விளையாட்டு அமைச்சிலிருந்து கிடைத்திருந்த 9 உடல் விருத்தி உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்கிறேன். |

## (ஆ) எதிர்பாராத பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 திகதி சபைக்கு எதிராக 09 வெளித் தரப்பினர்களினால் மற்றும் சபையினால் 04 வெளித் தரப்பினர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | தாமதத் தவறினால் கணக்கீடு செய்ய முடியாவில்லை என அறிவிக்கிறேன். |

## (இ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1 ஆண்டை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 4,399,126 ஆன செலுத்த வேண்டிய மீதியொன்று தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்தி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன்கொடுனர் பெறுமதியில் ரூபா 5,952,845 செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய கடன்கொடுனர் பெறுமதி தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் | | | |
| (i) 52 பிரிவு | அனுமதியற்ற 57 நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்களிற்கு வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) 126(vii)(ஊ) பிரிவு | 55 விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 105,200 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விளம்பரப் பலகை கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருமானம் அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் பணம் அறவிட்டு கணக்காய்விற்கு அறிக்கை செய்கிறேன். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சமர்பிக்க குறித்துக் கொண்டேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2)(ஆ) பந்தி | 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 551,465 பெறுமதியான 18 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வைப்புகள் தொடர்பாக முன் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |
| (ஈ) | உள்ளுராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை | | | |
| | (i) 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவு | குத்தகைகாரர்களினால் கடையறைகளை உபகுத்தகை மற்றும் உபவாடகையிற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுற்றறிக்கையிற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கை செய்கிறேன். |
| | (ii) 2013 ஜுலை 31 ஆம் திகதிய 07 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2019 ஆண்டளவில் பிரதேச சபையினால் 30 முட்சக்கர வண்டி தரிப்பிடங்களை நடாத்தி 582 முச்சக்கர வண்டிகளை பதிந்துள்ள போதும், ஒழுங்காக வருடாந்த கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டிகளை கணிப்பீடு செய்து கட்டணம் அறவிட வேண்டும். | ஒழுங்கான கணிப்பீடு ஒன்றை செய்து கட்டணம் அறவிடுவதாக தாழ்மையுடன் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 18,384,678 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 16,044,348 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 6,503,526 | 6,958,206 | 5,685,210 | 1,808,916 | 5,987,300 | 6,072,632 | 5,001,338 | 1,071,292 |
| (ii) | வாடகை | 2,727,400 | 3,895,639 | 3,704,985 | 364,861 | 1,255,800 | 3,322,006 | 3,180,701 | 141,305 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,555,000 | 3,470,200 | 3,470,200 | - | 2,500,000 | 3,016,850 | 3,016,850 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,700,000 | 17,306,192 | - | 25,181,523 | 12,700,000 | - | - | 12,700,000 |
| | | 25,485,926 | 31,630,237 | 12,860,395 | 27,355,300 | 22,443,100 | 12,411,488 | 11,198,889 | 13,912,597 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 300,000 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 15,756,931 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற் கொள்ள உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 03 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

(ஆ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை (out put) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டுகளில் செயலாற்றுகை திட்டத்தில் காட்டப்பட்ட 04 விடயங்களை மேற்கொள்ளாது ரூபா 1,736,395 ஆன தொகை செலவினத்திற்கு வரவு வைத்து கடன்கொடுனர் செலவு வைக்கப்பட்டிருந்தது. | திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | துரிதமாக பூர்த்தி செய்ய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

(இ) **கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 17 செயற்பாடுகளிற்காக ரூபா 1,205,000 ஆன தொகை பாதீட்டினால் ஒதுக்கப்பட்டுள்ள போதும் அச் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. | பாதீட்டு முன்மொழிவுகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னுறிமை வழங்க வேண்டிய முன்மொழிவுகளுக்கு முன்னுறிமை வழங்கியதில் இச் செயற்பாட்டை கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அது தொடர்பாக போதியளவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 பாதீடு தயாரிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை தொடர்புபடுத்தியதாக பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அகுரன வியாபார கட்டிடத் தொகுதியின் நிர்மாண திட்டத்திலுள்ள குறைபாடுகள் | வியாபாரிகளுக்கு மற்றும் நுகர்வோர்களுக்கு வியாபார நடவடிக்கைகளை | ரூபா 20 இலட்சம் பணத்தினை ஈடுபடுத்தி வியாபார கட்டிடத் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக 25 கடையறைகளில் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படாது சபைக்கு வாடகை செலுத்தப்படுகிறது. | மேற்கொள்ள வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொகுதியினை நவீனமயமாக்கி உளள்தாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | வீதவரி 5 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் அருரன பிரதேச சபை எல்லையில் 2012 ஆண்டின் பின்னர் பதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் வருவதாக அறிவித்திருந்த போதும் இது வரை வரவில்லை என அறிவிக்கிறேன். |

3.3 **மனிதவள முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணி பரிசோதனையின் போது 02 ஊழியர் மிகையும் 18 ஊழியர் வெற்றிடங்களும் நிலவின. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகையை அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் உள்ளடக்கவும் வெற்றிடங்களை தொடர்பாக உரிய நிறுவனங்களை அறிவூட்டியிருப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | சபையிலிருந்து இடம் மாறிச் சென்ற அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 39,875 ஆன கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மரணித்த அலுவலர் ஒருவரின் கடன் மீதி எனவும் அதனை பதிவழிக்க அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | ரூபா 17,649,179 பெறுமதியான மோடார் கிரேடர் 2019 ஆண்டில் 16 கி.மீ மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கேள்வி இல்லாததால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 2,000,000 பெறுமதியான எக்ஸ்கவேட்டர் இயந்திரம் பயன்படுத்தப்படாததால் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | சொத்துக்களை பழுதுபார்த்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வெண்டும். | இவ் இயந்திரத்தின் பழுதுபார்ப்பிற்காக விலை மனு கோரி தகவல்களை பெற்றுத்தருவாறு இயந்திரவியல் பொறியியலாளர் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெகோ இயந்திரதிற்காக 2019 ஆண்டில் ரூபா 185,327 செலவு செய்யப்பட்ட போதும், 98.3 மணித்தியாலங்கள் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. | இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும். | தற்போது இவ் இயந்திரம் செயலிழந்துள்ளதுடன் இயந்திரவியல் பொறியியலாளரின் ஆலோசனையை பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 2 டெக்டர்கள் மற்றும் 3 டேலர்கள் அலவதுகொட மைதானத்தில் துருப்பிடித்த வன்னம் காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வாகனத்தை ஏலத்தில் விற்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அறிக்கை பெற்றுத்தரவில்லை என அறிவிக்கிறேன். |
| (உ) | ரூபா 96,648 செலவில் அமைக்கப்பட்ட பயிர் சிற்றறை ஒன்று விளைவற்று நிலவியது. | இச் சிற்றறையை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொன்கிரீட் தட்டினூடாக நீர் கசிதல் மற்றும் பல உட்பிரச்சினைகள் எழுந்தன. பயனுள்ள நடவடிக்கைக்கு இவ் அறையை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | 2018 பெப்ரவரி 23 திகதி விளையாட்டு அமைச்சிடமிருந்து கிடைத்த 9 உடல் விருத்தி உபகரணங்கள் விளைவற்று நிலவின. | இவ் உபகரணங்களை பயன்படுத நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடல் விருத்தி மத்திய நிலையததில் இவ் உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5 பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டில் ரூபா 10,392,887 பெறுமதியான மூலதன சொத்துக்கள் பெறப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டத்தை தயாரித்தல். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்விற்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |